நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.246/2024

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுரேஷ்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | முனுசாமி |
| கிராமம் | : | ஐவேலி |
| வட்டம் | : | சங்ககிரி |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 47 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 13–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜரில் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.20PM

1. நான்தான் இந்த வழக்கில் புகார்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் 23.01.2024 ம் தேதி காலை 10.00 மணி சுமாருக்கு புகார் கொடுத்தேன். எங்களது அலுவலக கணினிமூலம் புகார் தயார் செய்து கையொப்பம் இட்டு அதன்பிறகு

காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். நான், பயிற்சி இந்திய வனப்பணி அலுவலர் (IFS) அதிகாரி திருமதி. மாதவி யாதவ் மற்றும் என்னுடைய வாகன ஓட்டுநர் கோகுலகண்ணன் ஆகியோர் புகார் கொடுக்க சென்றோம்.

2. வாகனத்தின் பதிவெண்ணை இரகசிய தகவலாக எங்களிடம் சொன்னார். அந்த வாகனம் பொளிரோ பிக்கப் ஆகும். இந்த வழக்கில் ஈஸ்வரி, அவருடைய மருமகள் கண்ணம்மாள், அப்போதைய கிராம நிர்வாக அதிகாரி ஆகியோரிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமலத்தை காவல் துறையினரிடம் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

3. சம்பவம் சமயத்தில் மேட்டூர் வனச்சரகர் அலுவலகத்திற்கு 03.12.2023 முதல் 05.02.2024 வரை கூடுதல் பொறுப்பாளராக இருந்தேன். கைபேசி மூலமாக இரகசிய தகவல் சுமார் இரவு 07.45 –08.00 மணிக்கு வந்தது. தகவல் வரும்போது நாங்கள் ரோந்து பணியில் இருந்தோம். தகவல் கிடைத்தவுடன் நான், எனது வாகன ஓட்டுநர் கோகுலகண்ணன், பீட் வனக்காப்பாளர் திரு. நல்லத்தம்பி, வனக்காப்பாளர் சதீஷ், வனக்காப்பாளர் பத்ரன் ஆகியோர் சம்பவயிடத்திற்கு சென்றோம்.

4. சம்பவயிடத்திற்கு சென்றபோது யார்யார் இருந்தார்கள் என்றால் சம்பவயிடத்தில் யாரும் இல்லை. ஈஸ்வரி வீட்டின் அருகில் எத்தனை வீடுகள் இருந்தது என்று சரியாக நியாபகம் இல்லை. கிராம நிர்வாக அதிகாரிக்கு பீட் வனக்காப்பாளர் நல்லதம்பி தகவல் சொன்னார். தகவல் கிடைத்து சுமார் 2 மணி நேரம் கழித்துதான் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் அவருடைய உதவியாளர் சுமார் இரவு 10.30 மணிக்குமேல் சம்பவயிடத்திற்கு வந்தார்கள்.

5. அதன்பிறகுதான் காவல் துறையினர் சுமார் இரவு 11.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு வந்தார்கள். அப்போது நாங்கள் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி மட்டும் தான் இருந்தோம். சம்பவயிடத்தில் இருந்து கருங்காலி கட்டைகளை கைப்பற்றி நாங்கள் அலுவலகத்திற்கு கொண்டுவரும்போது சுமார் 01.30 மணியிருக்கும்.

6. சம்பவம் சம்மந்தமாக மாவட்ட வன அலுவலருக்கு நான் தான் தகவல் சொன்னேன். அவர் காவல் துறைக்கு போன் செய்து தகவல் கொடுத்து கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எனக்கு தொடர்புக்கொண்டு சம்பவம் பற்றி விசாரித்தார். காவல் உதவி ஆய்வாளர் ராஜா மற்றும் அவருடன் 2–3 போலீசார் அன்றிரவே 10.30–11.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு வந்தார்கள்.

7. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க செல்லும்போது எங்களுடன் கிராம நிர்வாக அலுவலர் வரவில்லை. பயிற்சி இந்திய வனப்பணி அதிகாரி அன்றுதான் ஆய்வுப்பணிக்காக அங்கு வந்திருந்தார். என்னுடைய வாகனத்தில் அவரும் வந்தார். சுமார் 20 நாட்கள் பிறகு நான் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டேன். உதவி ஆய்வாளர் மணிமாறன் என்னை விசாரணை செய்தார்.

8. சம்பவம் பற்றி விசாரணை செய்தார். வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை. கருங்காலி கட்டைகள் எங்களது அலுவலகத்தில் வைக்கப்பட்டது. கருங்காலி கட்டைகள் தொடர்பாக O.R.No.9/2024 என்ற எண்ணில் மகேந்திரன் என்பவர் ரூ.75,000/– அபராதம் செலுத்தியுள்ளார். அதற்கான இரசீதை மாவட்ட வன அலுவலர் கடந்த 23.01.2024 ம் தேதி கொடுத்துள்ளார்.

9. மேற்படி அபராதம் செலுத்திய பிறகுதான் போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி அபராதம் செலுத்திய விவரத்தையும் மேற்படி மகேந்திரன் என்பவர் மீது இருந்த வழக்கு பற்றிய விவரத்தையும் சொன்னேன். மேற்படி மகேந்திரன் என்பவரிடமிருந்து கட்டையை கைப்பற்ற முயற்சி செய்யும்போதுதான் இந்த வழக்கின் எதிரி சின்னப்பன் பிரச்சனை செய்தார்.

10. **நீதிமன்ற கேள்வி: மேற்படி மகேந்திரன் சம்மந்தப்பட்ட வழக்கு ஆவணங்கள் உங்களிடம் உள்ளதா ?** மேற்படி வழக்கில் நான் மாவட் வன அலுவலர் முன்பாக தாக்கல் செய்த படிவம் A ல் தாக்கல் செய்த தனி புகாரின் நகல் என் வசம் உள்ளது. அது எதிரி மகேந்திரனுக்கு எதிராக பதிவுசெய்யப்பட்டது. அந்த புகாரின்பேரில் தான் மகேந்திரன் அபராதம் செலுத்தியுள்ளார். அந்த தனி புகாரின் பேரில் தான் கருங்காலி கட்டைகள் அரசுடைமையாக்க வேண்டி வனச்சரகர்

அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அந்த படிவம் A சான்றிட்டு தாக்கல் செய்கிறேன். (**அது நீ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

11. மேற்படி வழக்கு சம்மந்தமாக வாய்மொழியாக காவல் துறை விசாரணையின்போது தெரிவித்தேன். ஆனால் ஆவணங்களை ஒப்படைக்கவில்லை. உண்மையில் நான் தாக்கல் செய்த படிவம் A ஆவணம் வழக்கிற்காக தற்போது தான் தயார் செய்யப்பட்டு இந்த வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12. இதுவரை சாட்சியம் அளித்த வனத்துறையை சார்ந்த யாரும் மேற்கண்டவாறு வழக்கு இருந்ததாகவோ அபராதம் செலுத்தப்பட்டதாகவோ தெரிவிக்கவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக ஆவணங்களை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

13. உண்மையில் நான் சொன்னவாறு கருங்காலி கட்டைகளை கைப்பற்றப்பட்டிருந்தால் அது அரசுடைமையாக்கப்பட்டு அது தொடர்பான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. மேற்படி நான் தாக்கல் செய்த 'அ' படிவத்தில் கட்டைகளை கைப்பற்ற முயற்சி செய்யும்போது இந்த வழக்கின் எதிரி சின்னப்பன் தடை செய்ததாக குறிப்பிடவில்லை.

14. மேற்படி மகேந்திரன் தொடர்பான தடிமர வழக்கில் சின்னப்பன் பிரச்சனை செய்ததாக எந்த குறிப்பும் இல்லை. உண்மையில் எதிரி சின்னப்பன் பொருட்களை கைப்பற்றும்போது சின்னப்பன் பிரச்சனை செய்திருந்தால் அவருடைய பெயரை குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் அவரையும் அந்த வழக்கில் எதிரியாக சேர்த்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

15. மகேந்திரன் அபராதம் செலுத்துவதாக போன் மூலம் சொன்னார். அவர் வருவதற்குள் சின்னப்பன் கட்டையை எடுக்க கூடாது என்று பிரச்சனை செய்தார். மகேந்திரனை மேற்படி தடிமர வழக்கில் விசாரணை செய்துள்ளேன். அதில் சின்னப்பன் கட்டைகளை கைப்பற்றும்போது பிரச்சனை செய்ததாக

குறிப்பிடவில்லை.

16. மகேந்திரனின் அக்கா ஈஸ்வரி வீட்டில்தான் கட்டைகள் இருந்தது. அந்த கட்டைகள் கைப்பற்றப்பட்ட அன்று ஈஸ்வரி மற்றும் அவரது மருமகள் கண்ணம்மாள் என்பவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அவை பதிவுசெய்யப்பட்ட பின்னிட்டுதான் எதிரி சின்னப்பன் வந்து பிரச்சனை செய்தார். மறுநாள் தான் மகேந்திரனை அலுவலகத்தில் விசாரணை செய்தேன்.

17. சம்பவயிடத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தை வனக்காப்பாளர் என்முன்னிலையில் பதிவுசெய்தார். மேற்படி மகேந்திரன் மீது பதிவுசெய்யப்பட்ட எந்த ஆவணங்களையும் நாங்கள் காவல் துறையினரிடம் ஒப்படைக்கவில்லை. எதிரி சின்னப்பன் அவரது ஊரில் மதிப்பு மிகுந்த நபர் என்றால் தெரியாது. 2-3 முறை முன்னாள் பஞ்சாயத்து தலைவர் என்று சொன்னார்கள். மேற்படி மகேந்திரன் மீது பதிவுசெய்யப்பட்ட வழக்கு புலன் விசாரணையில் சின்னப்பனால் தடை ஏற்பட்டது என்று எந்த ஆவணங்களிலும் நான் குறிப்பிடவில்லை.

18. உண்மையில் எதிரி சின்னப்பன் எங்களை அரசு பணி செய்யவிடாமல் தகராறு செய்திருந்தால் அதற்கான ஆவணங்களை நாங்கள் காவல் துறையினரிடம் கொடுத்திருப்போம் என்றாலும் எதிரி சின்னப்பன் ஒரு மதிப்புமிகுந்த நபர் என்றாலும் அவர்மீது ஒரு பொய்யான புகாரினை கொடுத்து அதன்பேரில் போலீசார் பொய் வழக்கு போட்டதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 04.10PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.246/2024

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சதீஷ் |
| தந்தை / கணவர் பெயர் | : | சம்பு |
| கிராமம் | : | பூலாம்பட்டி |
| வட்டம் | : | எடப்பாடி |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 36 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 13–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜரில் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.11 PM

1. நான் கொளத்தூர் சோதனைச்சாவடியில் இருந்து சுமார் 08.30 மணிக்கு நானும் வனச்சரகர் சுரேஷ்குமார் மற்றும் வனக்காப்பாளர் பத்ரன், வனச்சரகர் வாகன ஓட்டுநர் கோகுலகண்ணன், வனக்காப்பாளர் நல்லதம்பி ஆகியோர்

சம்பவயிடத்திற்கு சென்றோம்.

2. நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்றபோது வீட்டின் உரிமையாளர் ஈஸ்வரி, கண்ணம்மாள் ஆகியோர் இருந்தார்கள். அதன் பிறகு அரைமணிநேரம் கழித்து எதிரி சின்னப்பன் மற்றும் ஓட்டுநர் வினோத் மற்றும் அடையாளம் தெரியாத பொதுமக்கள் மேற்படி நபரை விசாரித்துக்கொண்டிருக்கும்போது அங்கு வந்தார்கள்.

3. புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு நான் செல்லவில்லை. சம்பவயிடத்தில் இருந்து சுமார் இரவு 12.00 மணிக்குமேல் கிளம்பினோம். சம்பவயிடத்தில் இருந்த கருங்காலி கட்டைகளை வாடகைக்கு பொளிரோ பிக்கப்பை வாகனத்தை எடுத்துக்கொண்டு மேட்டுர் வனச்சரகர் அலுவலகத்திற்கு அன்றிரவே கொண்டுவந்துவிட்டோம்.

4. உள்ளூர் வனக்காவலர் மூலம் மேற்படி வாகனங்களை ஏற்பாடு செய்தோம். சம்பவயிடத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் மட்டும் சுமார் 09.30 மணிக்கு வந்தார். அதே சமயத்தில் போலீசாரும் வந்துவிட்டார்கள். காவல் உதவி ஆய்வாளர் ராஜா உட்பட மொத்தம் சுமார் 4 நபர்கள் வந்திருப்பார்கள். எண்ணிக்கை சரியாக நியாபகம் இல்லை.

5. கடந்த 2 வருடங்களாக மேட்டுர் வனச்சரகத்தில் பணிபுரிந்து வருகிறேன். எதிரி சின்னப்பன் 2–3 முறை பஞ்சாயத்து தலைவராக இருந்தவர் என்றாலும் அந்த பகுதியில் மதிப்பு மிகுந்த நபர் என்றாலும் சரிதான். நான் சொன்னவாறு சொன்னவிதத்தில் சொன்ன நேரத்தில் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரிகள் கொடுத்த புகாருக்கு ஆதரவாகவும் போலீசார் போட்ட வழக்கிற்கு ஆதரவாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. சம்பவத்திற்கு அடுத்தநாள் அலுவலகத்தில் எனது அதிகாரிகள் எதிரிகள் மீது வழக்கு பதிவுசெய்யும்போது நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். காவல் உதவி ஆய்வாளர் என்னை போன் மூலம் விசாரணை செய்தார். சாட்சி தற்போது காவல் நிலையம் அழைத்து தன்னிடம் வாக்குமூலம் பதிவுசெய்ததாக

தெரிவித்தார். மறுநாள் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள்.

7. நான் சம்பவயிடத்திற்கு போகவில்லை என்றாலும் சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் எனது அதிகாரிகள் கொடுத்த புகாருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் மாற்றி மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 04.30PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.246/2024

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கோகுலகண்ணன் |
| தந்தை / கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | தேவூர் |
| வட்டம் | : | சங்ககிரி |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 35 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 13–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜரில் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.31 PM

1. சுமார் 08.30 மணிக்கு நானும் வனச்சரகர் சுரேஷ்குமார் மற்றும் வனக்காப்பாளர் பத்ரன், வனக்காப்பாளர் சதீஷ், வனக்காப்பாளர் நல்லதம்பி ஆகியோர் சம்பவயிடத்திற்கு சென்றோம். நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்லும்போது

ஈஸ்வரி மற்றும் அவரது மருமகள் கண்ணம்மாள் இருந்தார். ஊர் பொதுமக்கள் யாரும் அங்கு வரவில்லை.

2. சேலத்திலிருந்து எனது அதிகாரிகள் யாரும் சம்பவயிடத்திற்கு வரவில்லை. புகாா கொடுக்க செல்லும்போதும் நான்தான் வாகனம் ஓட்டிச்சென்றேன். அப்போது வனச்சரகர் அலுவலரும், ஒரு இந்திய வனப்பணி அலுவலரும் காவல் நிலையம் புகார் கொடுக்க சென்றார்கள்.

3. சம்பவயிடத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் மட்டும் வந்தார். அவர் வரும்போது இரவு சுமார் 10.30 மணியிருக்கும். அவர் வந்த பிறகுதான் போலீசார் 4 நபர்கள் வந்தார்கள். போலீசார் வரும் போது இரவு 10.30–11.00 மணியிருக்கும். சம்பவயிடத்தில் நான் இருக்கும்போது ஈஸ்வரி, கண்ணம்மாள், சின்னப்பன், வினோத்குமார், மற்றும் இரண்டு நபர்கள் இருந்தனர். அந்த இரண்டு நபர்களில் ஒரு முருகேசன் மற்றும் ஒரு நபர் அங்கிருந்தார்கள். அவர்கள் ஊர்பொதுமக்கள் ஆவார்கள்.

4. போலீசார் என்னை விசாரித்தனர். காவல் உதவி ஆய்வாளர் ராஜா என்னை காவல் நிலையத்தில் வைத்துதான் புகார் கொடுத்தன்று சுமார் 02.00 மணிக்குமேல் விசாரணை செய்தார். புகார் மதியம் சுமார் 02.00 மணிக்கு வனச்சரகர் அலுவலர் கொடுத்தார். காவல் நிலையத்தில் கையெழுத்து எதுவும் நான் செய்யவில்லை.

5. நான் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் ஈஸ்வரின் என்பவரின் பட்டா நிலமாகும். எங்களது உயர் அதிகாரிகள் தகவல் கொடுத்து காவல் துறையினர் வருவதாக தெரிந்ததும் எதிரி சின்னப்பனும், அவருடன் வந்த வினோத்குமாரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். அதன்பிறகு காவல் துறையினர் பாதுகாப்புடன் பொருட்களை கைப்பற்றி வந்தோம்.

6. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எங்கள் உயர் அதிகாரி கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும்

சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 04.45 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**